STC.No. –666/2024
நாள் –25.06.2025.
P.W.1 – (பெருமாள்)
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் எதிரியின் தகப்பனாரின் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். எதிரியின் தகப்பனார் முத்துராமலிங்கம் நான் குறிப்பிட்டுள்ள செல்வஜோதி பயர்ஒர்க்ஸ் நிறுவனத்தை 2019ம் ஆண்டு நடத்தி வந்தார் என்றால் முத்துராமலிங்கம், சாந்தா, ராஜேஸ்வரன் ஆகியோர் நடத்தி வந்தார்கள். நான் குறிப்பிட்டுள்ள 35,45,380/– ரூபாயை செல்வஜோதி பயர்ஒர்க்ஸ் நிறுவன வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். 2019ம் ஆண்டு எதிரி செல்வஜோதி பயர்ஒர்க்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர் இல்லை என்றால் ஆம். நான் சட்ட அறிவிப்பு, புகார்மனுவில் எதிரி 24% வட்டி தருவதாக சொல்லியுள்ளது குறித்து ஆவணம் உண்டா என்றால் இல்லை வாய்மொழியாக சொன்னதுதான். வட்டி குறித்து நான் சொன்னதுபோல் பேசபடவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரி தம்பி எனக்கு 21.02.2024 அன்று ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன் அதற்கு நான் 27.02.2024 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன், அந்த அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பை இவ் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படுவது தங்கப்பாண்டி எனக்கு அனுப்பிய 21.02.2024 சட்ட அறிவிப்பு என்றால் சரிதான். அது **எ.சா.ஆ.1.** என்னிடம் காட்டப்படுவது தங்கப்பாண்டி வழக்கறிஞருக்கு நான் அனுப்பிய 27.02.2024 சட்ட பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அது **எ.சா.ஆ.2.** எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பில் நான் ரூ.58,40,000/– பாக்கி என குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பில் எ.சா.ஆ.1ல் சட்ட அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு சமரசம் பேசி ரூ.36,00,000/– இந்த வழக்கில் சொன்னதுபோல் முடிக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரி. அவர்கள் ரூ.36 லட்சத்திற்கு சமரசம் பேசிய பின்னர், வழக்கு காசோலை ஸ்டாப் பேமண்ட் கொடுத்ததால் மொத்த தொகை ரூ.58,40,000/– எனக் குறிப்பிட்டேன். எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பு வழக்கு காசோலைக்கு ஸ்டாப் பேமண்ட் கொடுத்துவிட்டதால் அனுப்பினேன் என்றால் சரி.

எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே நான் வாங்கியிருந்தேன் என்றால் அதன் பின் சமரசம் பேசி 14.03.2024 அன்று பின் தேதியிட்டு 3 காசோலைகள் கொடுத்தார்கள். நான் காசோலையில் 14.03.2024 அன்று பெற்று கொண்டதாக சொல்வதால் அதற்கு முன்பு ஸ்டாப் பேமண்ட் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் இந்த 3 காசோலைகளுக்கு ஸ்டாப் பேமண்ட் கொடுக்கவில்லை, எ.சா.ஆ.1 சட்ட அறிவிப்பில் எனக்கு ரூ.35,45,380/– முழுவதும் காசோலை மூலமாகவும், வங்கி பரிவர்த்தனை மூலமாகவும், நேரடியாகவும் எதிரியும் அவர் சகோதரர் தங்கப்பாண்டியும் செலுத்திவிட்டதாக தெரிவித்திருந்தார் என்றால் அவ்வாறு தெரிவித்திருந்தார் அது உண்மையல்ல. நான் எதிரியும் அவரது சகோதரர் தங்கப்பாண்டியும் என் வங்கி கணக்கில் ரூ.29,50,000/– செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகை கடன் தொகையில் பகுதி தொகைக்காக கட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பில் எதிரி செலுத்திய தொகை அனைத்தும்

வட்டிக்கானது மட்டும் எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி.

எ.சா.ஆ. 1 சட்ட அறிவிப்பில் எதிரி தகப்பனாரும் நானும் அண்ணன் தம்பி என்பதால் கைமாற்றாக லட்சக் கணக்கில் பணம் வாங்குவதும், பின்னர் செலுத்திவிடுவதும் வாடிக்கை எனக் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அது உண்மையல்ல. எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பில் நான் அவ்வாறு எங்களுக்கு இடையே கைமாற்று கடன் வாங்கி கொடுத்து கொள்வது இல்லை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. பொதுவாக, தமிழ்நாட்டில் அனைத்து காவல் நிலையத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவை, வேலை செய்யுமா செய்யாதா என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் சிசிடிவி கேமரா வேலை செய்யும் போது பதிவான பதிவுகளை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தால் வழங்குவார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பு அனுப்பிவிட்டு சிவகாசி டிஎஸ்பி அலுவலகத்தில் ஒரு புகார் கொடுத்து அதன் அடிப்படையில் மாரனேரி காவல் நிலையத்தில் நடைபெற்றது என்றால் என்னை இரு சக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து கடன் கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் மிரட்டல் விடுத்தார்கள் ஒருமுறை என்னை பின் தொடர்ந்த ஒரு நபரை நான் பிடித்துவிட்டேன் அவர் செல்போனில் எதிரியின் செல்போன் நம்பர் இருந்தது என் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால் டிஎஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்திருந்தேன். அது சம்மந்தமாக மாரனேரி காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது.

அந்த விசாரணை 14.03.2024 அன்று காவல் நிலையத்தில் வைத்து நடைபெற்றது என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து நான் காசோலைகளை வாங்கவில்லை. நான் புகார் கொடுத்ததாக சொல்லும் புகார் மனு நகல் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகார் குறித்து மாரனேரி காவல் நிலையத்தில் புகார் ஏற்பு மனு ரசீது வழங்கினார்களா என்றால் இல்லை. அந்த புகார் மனு விசாரணைக்கு காவல் நிலையத்தில் நான் என் அண்ணன் முத்துராமலிங்கம், எதிரி மற்றும் தங்கபாண்டி ஆகியோர் ஆஜராகியிருந்தோம். அந்த புகாரை சார்பு ஆய்வாளர் பிரகாஷ் விசாரித்தார். எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பு அனுப்பிய பின்பு நான் சொன்னது போல் சங்கதிகள் நடைபெற்றதாக என் புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் ஆம். காசோலை வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்பதால் சொல்லவில்லை. நான் கொடுத்த புகார் அது சம்மந்தப்பட்ட விசாரணை ஆவணங்கள் மாரனேரி காவல் நிலையத்தில் இருக்கும் என்றால் சரிதான்.

மாரனேரி காவல் நிலையத்தில் அந்த ஆவணங்களை வரவழைத்து பார்த்தால் நான் எதற்காக புகார் கொடுத்தேன் என்ன விசாரணை நடைபெற்றது என்ற விபரம் தெரியவரும் என்றால் ஆம். நான் என் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததால் புகார் கொடுத்தேன். அந்த விசாரணை முடிந்து அன்றைய தேதி எதிரி காசோலை கொடுத்தாரா என்றால் சாயந்தரம் 14.03.2024 அன்று கொடுத்தார். விசாரணை தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்னது டிஎஸ்பி அலுவலகம் அல்லது மாரனேரி காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமாக புகார் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி மற்றும் அவர் தந்தை மற்றும் எதிரியின் சகோதரரை நான் காவல் நிலையத்தில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் வரவைத்து உட்கார வைத்தேன் என்றால் சரியல்ல. நான் எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் அவர்கள் உட்கார வைக்கவில்லை விசாரித்தார்கள். நான் அப்போது காவல்

துறையினரின் மூலமாக எதிரி அவர் சகோதரர் மற்றும் தகப்பனார் மூவரையும் மிரட்டினேன் என்றால் சரியல்ல.

அந்த விசாரணையின் போது திருத்தங்கள் சரஸ்வதி நகர் சுப்ரமணியன் மகன் செல்வம் என்பவரும் எதிரி தரப்பினருடன் ஆஜராகியிருந்தார் என்றால் என எனக்கு எங்கள் வீட்டார் மட்டும் தெரியும். காவல் நிலையத்தில் எனக்கு யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரியுடன் செல்வம் காவல் நிலையத்திற்கு வந்தார் என்றாலும் அந்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் சரியல்ல. 14.03.2024 அன்று காவல் நிலையத்தில் நடைபெற்ற விசாரணை குறித்து செல்வம் என்பவரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. செல்வம் என்பவர் யாரென்று தெரியாது. செல்வம் என்பவரை விசாரித்தால் அன்றைய தேதி விசாரணை விபரங்கள் தெரியவரும் என்பதால் நான் செல்வம் என்பவரை தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.03.2024 அன்று எதிரி தரப்பினரை மாரனேரி காவல் நிலையத்தில் போலீஸாரை வைத்து மிரட்டி ரூ.6 லட்சம் கொடுத்தால் போதுமென எதிரி தரப்பினரையும் எதிரியையும் சம்மதிக்க வைத்தேன் என்றால் சரியல்ல. அந்த தேதியில் தான் காவல் நிலைய விசாரணையில் ரூ.6 லட்சத்திற்கு காசோலை எண். 205799 முழுவதும் பூர்த்தி செய்து வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்த ரூ.6 லட்சத்திற்கு கூடுதல் செக்யூரிட்டிக்காக பூர்த்தி செய்யாமல் எதிரியால் கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட பு.சா.ஆ.1 மற்றும் 2 காசோலைகள் இரண்டை மட்டும் காவல் நிலையத்தில் வைத்து பெற்றேன் என்றால் சரியல்ல.

விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் பிரகாஷ் மூலமாக எதிரி மற்றும் எதிரி தரப்பினரை மிரட்டி 02.04.2024 அன்று காசோலை எண். 205799 தொகையை எதிரி வங்கி கணக்கில் இருக்க கட்டாயபடுத்தினேன் என்றாலும் அந்த காசோலை தொகையை வசூலித்தேன் என்றாலும் சரியல்ல. ரூ.36 லட்சம் தொகையில் இருந்து ரூ.17,45,000/-ற்கு யாரும் குறைத்து தொகையை வாங்கமாட்டார் என்றால் சரியல்ல. அந்த ரூ.17,45,000/-த்தை எதிரி அவர் தகப்பனார் மற்றும் சகோதரர் ஆகியோர் கணக்கிட்டு கொடுத்தார்கள் எதிரி மற்றும் எதிரி தரப்பினர் மிரட்டி நான் லோடு அடிக்கும் இடத்தில் அவர்கள் லோடு அடிக்க வந்தார்கள் அவர்கள் ரூ.17,45,000/-தான் தருவோம் என சமரசம் பேச்சில் மிரட்டி கொடுத்தார்கள். நான் புகார் மனுவில் எதிரி ரூ.17,45,000/-தான் தருவோம் என மிரட்டி காசோலை கொடுத்ததாக சொல்லவில்லை. நான் எதிரி மற்றும் அவர்கள் குடும்பத்தினர் செய்து வந்த செல்வஜோதி பயர்ஓர்க்ஸ் தற்போது கணேஸ்வரி பயர்ஓர்க்ஸ் நிறுவனத்தை வீடியோ பதிவு செய்து பதிவாளர்களுக்கும் வங்கிகளுக்கும் பொய்யான புகார்களை கொடுத்தேன் என்றால் நான் வங்கிக்கு எதிரி மற்றும் எதிரி தரப்பினர் வங்கியை மோசடி செய்கின்றனர் என எ.சா.ஆ.2 பதில் அறிவிப்பை வங்கிக்கு அனுப்பினேன் நான் சார்பு பதிவாளருக்கு புகார் அனுப்பவில்லை அவ்வாறு அனுப்பினால் எதிரி மற்றும் எதிரி தரப்பினரர் கோடி கணக்கில் பணம் செலுத்தவேண்டியது வரும்.

நான் எதிரி மற்றும் எதிரி தரப்பினர் தொழில் செய்யவிடாமல் பல்வேறு பொய் புகார் கொடுத்து என் சகோதரரிடம் இருந்து செல்வஜோதி பயர்ஓர்க்ஸ் நிறுவனத்தை தற்போது கணேஸ்வரி நிறுவனத்தை அபரிக்கும் நோக்கோடு செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த பயர்ஓர்க்ஸ் பொது ஏலத்திற்கு சென்ற போது நான் ரூ.40,45,380/-லட்சத்தை கட்டினேன். நான் எதிரி மற்றும் எதிரி தரப்பினர் செலுத்தவேண்டிய பணத்தை செலுத்திய பின்பும் அதிக வட்டி கேட்டு மிரட்டி

வருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 14.03.2024 அன்று எதிரி எனக்கு 3 காசோலைகள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2024ம் ஆண்டு எதிரி பங்குதாரராக உள்ள கணேஸ்வரி பயர்ஒர்க்ஸ் நிறுவனத்தில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என்றாலும் அதன் காரணமாக எதிரியால் உடனடியாக என் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு கொடுக்கமுடியவில்லை என்றால் சரியல்ல.

14.03.2024 அன்று கூடுதல் செக்யூரிட்டியாக வாங்கிய பு.சா.ஆ.1 மற்றும் 2 காசோலைகளை நானே பூர்த்தி செய்து நானே இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரூ.5 லட்சம் ரொக்கமாக செலுத்தியதாக சொல்வது ரூ.35,45,380/– வங்கி பரிவர்த்தனையாக கொடுத்துவிட்டு அந்த தொகை மட்டும் ரொக்கமாக கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 அறிவிப்பு சங்கதிகளின் படி எனக்கு அனைத்து தொகைகளும் கொடுத்து முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.